


திண்டுக்கல் கிழக்கு, மேற்கு மாவட்ட கழக செயற்குழுக் கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் ஐ.பெரியசாமி சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் மேற்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் அர. சக்கரபணி எம்எல்ஏ, கிழக்கு மாவட்ட செயலாளர் இ.பெ. செந்தில்குமார் தலைமைக் கழக பிரதிநிதிகள் செல்வம் எம்.பி., பிரபு கஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர்.




தூத்துக்குடி வடக்கு மாவட்ட கழக அவசர செயற்குழு கூட்டம் கலைஞர் அரங்கில் நடைபெற்றது. கூட்டத்துக்கு வடக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கீதாஜீவன் தலைமை வகித்தார். தலைமை கழக பிரதிநிதிகள் நல்ல சேதுபதி, தமிழ் கா அமுதரசன், கோவில்பட்டி சட்டமன்ற உறுப்பினர் கருணாநிதி, விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் மார்க்கண்டேயன், மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ஆனந்தசேகரன், தலைமை செயற்குழு உறுப்பினர் ஜெகன் பெரியசாமி, மாவட்ட அவைத்தலைவர் செல்வராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் கழக மறுசீரமைப்பு குறித்து தலைமை கழக பிரதிநிதி நல்ல சேதுபதி விரிவாக எடுத்துரைத்தார். கூட்டத்தில் தூத்துக்குடி தொகுதி கழக மாநகர பகுதி செயலாளர்கள், கோவில்பட்டி தொகுதி நகர ஒன்றிய பேரூர் கழக செயலாளர்கள், விளாத்திகுளம் தொகுதி ஒன்றிய பேரூர் கழக செயலாளர்கள், மற்றும் மாவட்ட அணி அமைப்பாளர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

### தலைமைக் கழகப் பிரதிநிதிகள் முன்னிலையில்

# கரூர் மாவட்டக் கழகச் செயற்குழு ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி அறிக்கை!

கரூர், செப். 7-

கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



கரூர் மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டம் 8.09.2026 அன்று செவ்வாய்கிழமை காலை 10.30 மணிக்கு கரூர் மாவட்ட கழக அலுவலகம் (கலைஞர் அறிவாலயம்) தளபதி அரங்கில் மாவட்டக் கழக அவைத் தலைவர் டி. ராஜேந்திரன் தலைமையிலும் தலைமைக் கழகப் பிரதிநிதிகள், தலைமை தணிக்கைக்குழு உறுப்பினர் தி.அ.முகமது சகி, பெரம்பலூர் நகரக் கழக செயலாளர் எம். பிரபாகரன் ஆகியோர் முன்னிலையில் கரூர் மாவட்ட செயற்குழு கூட்டம் நடைபெற உள்ளது.

அதுசமயம் சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், கழக பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள்-பொறுப்பாளர்கள், மாவட்ட அனைத்து அணி அமைப்பாளர்கள், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்

பொருள்: தலைமைக் கழகப் பிரதிநிதிகள் முன்னிலையில் 22.08.2026 அன்று அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற தலைமை செயற்குழு கூட்டத்தில் கழக நிர்வாக சீரமைப்பு தீர்மானத்தின்படி பகுதி, நகர, ஒன்றிய, பேரூர் கழகம் மறுசீரமைப்பு குறித்து

செப்டம்பர் 15ம் தேதி அண்ணா பிறந்தநாள், செப்டம்பர் 15 ம் தேதி அண்ணா அறிவாலயத்தில் நடைபெறும் கழகப் முப்பெரும் விழா மற்றும் செப்டம்பர் 17ம் தேதி பெரியார் பிறந்த நாள் கொண்டாடுவது குறித்து

கழக வளர்ச்சி பணிகள்

இவ்வாறு மாவட்டச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி அறிக்கையில் தெரிவித் துள்ளார்.

# மதுரை தெற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் எம்.எல்.ஏ. அறிக்கை!

மதுரை, செப். 7-

மதுரை தெற்கு மாவட்ட திமுக செயற்குழு கூட்டம் 09-09-2026 புதன்கிழமை மாலை 05.00 மணி அளவில் திருமங்கலம் பைபாஸ் ரோட்டில் அமைந்துள்ள கொடி அரங்கம் மகாலில், மதுரை தெற்கு மாவட்ட செயலாளர், திருமங்கலம் சட்டமன்ற தொகுதி உறுப்பினருமான சேடபட்டி மு. மணிமாறன் எனது தலைமையிலும் தலைம கழக பிரதிநிதிகள் பி.டி.சி. செல்வராஜ், மூத்த வழக்கறிஞர் ரவீந்திரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற இருப்பதால் மாநில நிர்வாகிகள், மாவட்டகழக நிர்வாகி கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் சிறப்பு



அழைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பொருள் : கழக தலைவர் அறிவுப்பின்படி, கழக மறுசீரமைப்புக்குழு வழங்கிய பரிந்துரையின் அடிப்படையில் - ஒன்றிய, நகரம், பகுதி, பேரூர், வட்டம், கிளை கழக அமைப்புகளை உருவாக்குதல் சம்மந்தமாக...

இவ்வாறு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### திட்டக்குடி சட்டமன்றத் தொகுதியில்

# இடி தாக்கி உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு நிதி உதவி!

## முன்னாள் அமைச்சர் சி.வெ.கணேசன் வழங்கினார்!

கடலூர் செப். 7--

திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி பெண்ணாடம் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் நேற்று முன்தினம் மாலை திடீரென இடியுடன் கூடிய பலத்த மழை பெய்தது.

அப்போது, பெண்ணாடம் அருகே உள்ள நரசிங்கமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி பெரியசாமி மகன் அழகானந்தம் (45) என்பவர் தனது விவசாய நிலத்தைப் பார்ப்பதற்காகச் சென்றுள்ளார்.

அங்கு எதிர்பாராதவிதமாக பயங்கர சத்தத்துடன் இடி, மின்னல் தாக்கியதில் அழகானந்தம் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார்.

இதேபோல், அப்பகுதியில் பெய்த மழைக்காக அங்குள்ள ஒரு மரத்தடியில் ஒதுங்கிய அதே பகுதியைச் சேர்ந்த பெரியசாமி மகன் சத்தியராஜ் (35), செல்லதுரை மகன் ராம்குமார் (26) மற்றும் தீவலூர் கிராமத்தைச் சேர்ந்த பழனிமுத்து ஆகிய மூவர் மீதும் இடி தாக்கியது.

இதனால் அவர்களுக்கு கை, கால்கள் செயல் இழந்துள்ளது.





விருத்தாசலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வரும் நிலையில் சிகிச்சை பெறுபவர்களை கடலூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர்- முன்னாள் அமைச்சர்- திட்டக்குடி சட்டமன்ற உறுப்பினர் சிவெ.கணேசன் சந்தித்து பிரட் பால் பழம் ஹார்லிக்ஸ் உள்ளிட்ட உணவு பொருட்கள் கொடுத்து நிவாரணம் வழங்கி ஆறுதல் கூறினார்.

தொடர்ந்து மருத்துவர்கள் இடம் இவர்களுக்கு முறையான சிகிச்சை வழங்க வேண்டும். பாதிக்கப்பட்டவர்கள் விவசாயிகளும் கூலித் தொழிலாளர்களும் ஆவர். இது சம்பந்தமாக அவர்களுக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்து தருவதாகவும் சட்டசபையில் பேசுவதாகவும் தெரிவித்தார். உடன் மங்களூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் பட்டூர் வீர. அமிர்திலிங்கம் திட்டக்குடி நகரக் கழக செயலாளர் வி. பி.பி.பரமகுரு நல்லூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் செம்பியன் தியாகராஜன் பெண்ணாடம் பேரூர் கழக செயலாளர் குமரவேல் அ. கோதண்டபாணி தொளார் இராஜேந்திரன் ஜெயராமன் பட்டி சு. வசந்த் விருத்தாசலம் நகர கழக செயலாளர் தண்டபாணி நகர மன்ற தலைவர் மருத்துவர். சங்கவி முருகதாஸ் வழக்கறிஞர் க. ரவிச்சந்திரன் உள்ளிட்ட நிர்வாகிகள் இருந்தனர்.



வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தூத்துக்குடி மாவட்டம், எட்டையாபுரம் தாலுகா பேரிலோவன்பட்டி முதலிபட்டி ஊரணி நீர்வரத்து பாதையை அகலப்படுத்துவதற்கும்,சேதமடைந்துள்ள உபரிநீர் கால்வாயை சீரமைப்பதற்கும் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ.வி .மார்கண்டேயன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். ஆற்றங்கரை முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சீத்தாராமன், சமூக ஆர்வலர் பேரிலோவன்பட்டி செல்வகுமார் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

### திருப்பத்தூர் மாவட்டம் முழுவதும்

# பேரறிஞர் அண்ணா பிறந்த நாளை எழுச்சியுடன் கொண்டாடுவோம்!

## மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

திருப்பத்தூர், செப். 7-

திருப்பத்தூர் மாவட்ட செயற்குழுக் கூட்டம் வாணியம்பாடியில் உள்ள மாவட்டகழக அலுவகத்தில் மாவட்ட அவைத்தலைவர் ஆர்.எஸ்.ஆனந்தன் தலைமையில் மாவட்ட செயலாளர் க.தேவராஜி ஏற்பாட்டில் நடைபெற்ற கூட்டத்தில் தலைமைக் கழக பிரதிநிதிகள் விளையாட்டு மேம்பாட்டு அணி மாநில துணைச் செயலாளர் வே.கௌதமன் தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணை செயலாளர் வி.மு.விஜய கதிரவன் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டுசென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற தலைமை செயற்குழு கூட்டத்தில் கழக நிர்வாக சீரமைப்பு தீர்மானத்தின் படி ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளைக் கழகம் மறு சீரமைப்பு பணிகள் குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில் இன்னாள்- முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டார்கள்.

பவள விழா கண்டு நூற்றாண்டை நோக்கி நடைபோடும் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம் புத்தெழுச்சியைப் பெற - அடுத்தகட்டப் பயணத்தில் வெற்றிகளை அடைய, கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற தலைமைச் செயற்குழுவில் முன்மொழியப்பட்ட கீழ் கண்ட தீர்மானங்களை ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது.

"செயற்குழு தீர்மானங்களின் அடிப்படையில், வயது வரம்பு காரணமாகவும் - ஒருவர் எத்தனை முறை பதவியில் இருக்கலாம் என்ற வரம்பு காரணமாகவும் பொறுப்புகளை இழப்பவர்கள் யாரையும் தலைவர் கைவிடப் போவதில்லை; அவர்கள் அனைவருக்கும் அவர்கள் தகுதிக்கேற்ற வேறு பொறுப்புகளை வழங்கும் வகையில் தலைவர்முடிவெடுப்பார்". "சுதந்திரமான - நேர்மையான தேர்தல் மூலமாகப் புதிய நிர்வாகிகள், இளைஞர்கள் பொறுப்புகளுக்கு வருவார்கள். அதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்" என்று இக்கூட்டத்தின் வாயிலாக தீர்மானிக்கப் படுகிறது.

கிளைக் கழகங்கள்தான் நமது கழகத்தின் வலுவான கட்டமைப்புக்கு ஆணிவேர். கழகத்தின் அடிப்படை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப் படும் நிர்வாகிகள் கிளைச் செயலாளர்கள். கழகத்தின் நிர்வாகக் கட்டமைப்பில் புது ரத்தம் பாய்ச்சிட, இளம் தலைமுறையினருக்கு வாய்ப்புகளை வழங்கிட, கிளைக் கழகச் செயலாளருக்கான அதிகபட்ச வயது 45 என்றும், கிளைக் கழகச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவர் இரண்டு முறை மட்டுமே அப்பொறுப்பை வகிக்க முடியும் என்றும் தீர்மானிக்கப்படுகிறது.

நகர - பேரூர் உள்பட்ட கழகங்களுக்கு வட்டக் கழகச் செயலாளரின் அதிகபட்ச வயது 50 என நிர்ணயிக்கப்படுகிறது. மேலும், ஒருவர் அப்பொறுப்பை அதிகபட்சமாக இரண்டு முறை மட்டுமே வகிக்க முடியும்எனத்தீர்மானிக்கப் படுகிறது.

கிராமபுறங்களுக்கும் நகர் புறங்களுக்கும் இடைப்பட்ட அமைப்பு பேரூராட்சிகள். அந்தப் பேரூர் கழகங்களுக்கு பொறுப்பு வகிக்கும் பேரூர்கழகச் செயலாளரின் அதிகபட்ச வயது 60 என நிர்ணயிக்கப் படுகிறது. ஒருவர் பேரூர்க் கழகச் செயலாளராக அதிகபட்சமாக, இரண்டு முறை மட்டுமே பொறுப்பு வகிக்க முடியும் எனத் தீர்மானிக்கப்படுகிறது.

இந்தியாவிலேயே வேகமாக நகரமயமாகிவரும் மாநிலம் தமிழ்நாடு. நிர்வாக வசதிக்காக மக்கள் தொகை அடிப்படையில் நகரக் கழகங்களைப் பிரிப்பது இன்றியமையாததாகிறது. அதன் அடிப்படையில், சராசரியாக 40 ஆயிரம் வாக்காளர்களை உள்ளடக்கிய ஒரு நகரக் கழகம் உருவாக்கப்பட வேண்டும். நகர கழகங்களின் அமைப்பை வலுப்படுத்தும் வகையில், நகர செயலாளரின் அதிகபட்ச வயது 60 என்று நிர்ணயிக்கப்படுவதுடன், நகர செயலாளராக ஒருவர் இரு முறை மட்டுமே பொறுப்பு வகிக்க முடியும் என்று தீர்மானிக்கப் படுகிறது.

மாவட்டக் கழகங்கள் எனும் வலிமைமிக்க அமைப்புகளைத் தாங்கி நிற்கும் தூணாக விளங்குபவை ஒன்றியக் கழகங்கள். அவற்றை மேலும் வலிமை பொருந்திய அமைப்பாக மாற்றிட சராசரியாக 30 ஆயிரம் வாக்காளர்களுக்கு ஒரு ஒன்றியக் கழகம் என்ற அடிப்படையில் ஒன்றிய அமைப்புகள் உருவாக்கப்பட வேண்டும். ஒன்றியக் கழகசெயலாளரின் அதிகபட்ச வயது 60 என நிர்ணயிக்கப் படுவதுடன், ஒருவர் ஒன்றிய கழக செயலா ளராக அதிகபட்சமாக இரண்டு முறை மட்டுமே பொறுப்பு வகிக்க முடியும் என்று தீர்மானிக்கப்படு கிறது.

கழகத்தின் நிர்வாகத்தில் வாய்ப்புகளை விரிவுபடுத்த மாவட்டக் கழக செயலாளரின் அதிகபட்ச வயது 70 என நிர்ணயிக்கப் படுகிறது. அதேபோல், மாவட்டக் கழக செயலாளராகும் ஒருவர் அதிகபட்சமாக மூன்று முறை மட்டுமே பொறுப்பு வகிக்க முடியும்.

தலைமைக் கழகத்திலிருந்து கழக மறுசீரமைப்புக் குழுவால் அளிக்கப்படும் வழிகாட்டு நெறிமுறைகளைக் கொண்டு மாவட்டத்தின் ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் - வட்ட - கிளைக் கழக அமைப்புகளை 15 நாட்கள் என்ற காலவரையறைக்குள் உருவாக்க வேண்டும். அதன் பின்னர், தலைமைக் கழகத்தால் அனுப்பப் படும் பிரதிநிதி யின் முன்னிலையில், மீண்டும் மாவட்டசெயற்குழுவைக் கூட்டி, ஒப்புதலைப் பெற்று, இறுதிப் பட்டியலைத் தலைமைக் கழகத்துக்கு விரைந்து அனுப்பி வைக்க வேண்டும் என இக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப் படுகிறது.

எங்கள் மாவட்டத்தில் ஏற்கனவே கிராம ஊராட்சிகளில் குக்கிராமங்கள் வாரியாக கிழைக் கழகங்கள் அமைந்துள்ளது. தற்போது நடைபெற கூடிய உட்கட்சி தேர்தலில் கிராம ஊராட்சிகளில் உள்ள வார்டு கிளை அடிப்படையில் கிளை அமைப்பு ஏற்படுத்தி தர தலைமை கழகத்தை மாவட்ட கழகத்தின் சார்பில் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பேரறிஞர் அண்ணா அவர்களின்பிறந்தநாளான செப்டம்பர் 15 அன்று காலை 9.00 மணியளவில் திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே உள்ள முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் திருவுருவ சிலை அருகிலிருந்து ஊர்வலமாக புறப்பட்டு பேரறிஞர் அண்ணாவின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது.

இந்த நிகழ்வு முடிவடைந்தவுடன் நமது மாவட்டத்தில் உள்ள அனைத்து நிர்வாகிகளும் மற்றும் கழக உறுப்பினர்கள் அனைவரும் சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற உள்ள முப்பெரும் விழாவில் பெரும் திரளாக கலந்து கொள்வது என்று ஏகமானதாக தீர்மானம் நிறைவேற்றப் படுகிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.